1161



OFFICE OF THE REGISTRAR
29 NOV 1928
MADRAS

ஸ்ரீ

ஸ்ரீ:ராதாருக்மணி ஸத்யபாமா ஸமேத

ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரம்மணே நம:

# வத்ஸலா கல்யாணக் கும்மி.

ஸ்ரீரங்கம்

ரங்கநாயகி அம்மாளால்

இயற்றப்பெற்றது.

[ஐந்தாம் பதிப்பு.]

திருச்சி ஜனானுகூல அச்சுக்கூடத்தில்


அச்சிடப்பெற்றது.

1928.

காபி ரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

0-8MKA4,V
N28
168450

OFFICE OF THE ...
No.
20 NOV 1928
MADRAS
2498
844.8



ஸ்ரீ

ஸ்ரீ நுக்மணி ஸத்யபாமா ஸமேத ஸ்ரீ கிருஷ்ணய பரப்ர்மனே நம:

ராதாவல்லபன் துணை.

# வத்ஸலா கல்யாணக் கும்மி.

## 1-வது கட்டம்.

பலராமர் தன்பெண் வத்ஸலே கல்யாண விஷயமாக ரேவதியிடம் யோசித்தல்.

இராகம் 'பட்டாடை திருடிய' மெட்டு.

1. தென்னரங்கராஜன் தீனர்கள் விஸ்வாஸன் திருவடிமலர் பணிந்து
கன்னிகை வத்ஸலேயின் கல்யாணமதனைக் களிப்புடனுரைத்திடுவேன்
[ராஜனே

2 விண்ணவர்கள் புகழும் மன்னவர்கள் மகிழும் வடிவுயர் துவாரகையில்
அண்ணனுடன் கூடி கண்ணனும்கொண்டாடி ஆண்டுவரும் நாளையிலே
[கண்ணனும்

3. அண்ணன் பல்ராமன் அதிபல பீமன் பெண்ணான வத்ஸலேக்கு
கல்யாணம் புரிந்து கண்டுமனமகிழ்ந்து களித்திடமனதிலெண்ணி
[ராமனும்

4. அந்தப்புறம் நாடி அன்புடனேகூடி அண்ணன் பலராமனப்போ
அந்தரங்கதேவி ரேவதியைக்கூவி ஆனந்தமாயுரைத்தார்—ராமனும்.

## 2-வது கட்டம்.

பலராமர் தன்தேவி ரேவதியிடம் சொல்லல்.

1. அருமையுள்ள காதலியே அன்புடன் கேள் ரேவதியே
மருமகனென்னபிமனுக்குன் மகளை மணஞ்செய்திடுவேன் [அருமை

2. அத்தை குந்திபேரனடி அர்ஜுனன் குமாரனடி
சுத்தன் தனிவீரனடி ஸுகுணமுள்ளோன் தீரனடி [அருமை

3. பங்கயம்போல் முகத்தனடி பாலன் வெகு சமர்த்தனடி
தங்கை யெந்தன் ஸுபத்திரையின் தனயனவன் ஒருத்தனடி [அருமை

4 வத்ஸலேக்கு ஏற்றவனே வாலவயதுடையவனே
இச்சையென்ன நீபுகல்வாய் என்னிடத்திலேமகிழ்வாய் [அருமை

16450
சென்னை-600 008



## 3-வது கட்டம்.

ரேவதி வத்ஸலையை அபிமன்யுவுக்கு கொடுக்கக்கூடாதென்று மறுத்துரைத்தல்.

இராகம் 'தாரதில்லானு' மெட்டு

1. ஏழையபிமனுக்குத்தரலாமோஎன்மகள்தனக்கவன்ஸமமாமோ
கோழைமதியடைந்து வாழ்வு ஸுகமிழந்து
கொடுமையதாகிக் கடுவனமேகி
கூடி ஐவரும் வருந்துகின்றார்
தேடியே காய்கனி அருந்துகின்றார் அந்தஏழை

2. அஞ்சிப்பயந்தவர் வாடிவிட்டார் பஞ்சைகள் போல் வன
(மோடி விட்டார்
கொஞ்சம் பொருளுமில்லை மிஞ்ச வழியுமில்லைக்
கொடுப்பதோ பெண்ணைக் கெடுப்பதோ கண்ணைக்
கொடுத்தாலும் மகள் ஸுகிப்பாளோ
கூடியபிமனுடன் இருப்பாளோ அந்த ஏழை

3. அஸ்திநாபுரமுழுதாளுமன்னன் அதிக செல்வமுடைய
(ஸம்பன்னன்
அரசன் துரியோதனன் அரவக்கொடியோன் ஸுதன்
அவன் வெகு சூரன் அழகினில் மாறன்
அருமையுடைய பெண்ணைக் கொடுத்திடுவோம்
ஆசையாய் ஸ்ரீதனம் எடுத்திடுவோம் அந்தஏழை

4. அன்புள்ளமனைவி சொல் கேட்டுவந்தார் ஆனந்தமாகவே
(தானெழுந்தார்
அண்ணனும் ராமனும் அதிபல பீமனும்
கண்ணனை நாடிக் கண்டு கொண்டாடி
காதலாய்த் தம்பி முன் நின்று கொண்டார்
களிப்புடன் ராமனும் சொல்லுகின்றார் அந்த ஏழை.

## 4-வது கட்டம்.

பலராமர் வத்ஸலை கல்யாண விஷயமாக கண்ணனிடம் யோசித்தல்.

இராகம் தன்யாஸி கண்ணாவே மெட்டு.

1. அருமைத்தம்பியே கண்ணனே கேளடா அழகியபெண்மணிவத்ஸலையை
மருமகனாகிய அபிமனுக்குத்தரவுன் மதனிக்கு மனது கொஞ்சமு
மில்லையே (அ)

2. யோஜித்துப்பார்த்தால் எந்தனுக்குமதுவே உஜிதமாகவே தோணுறதே
ராஜன் துரியோதனன் மகனிலக்கணன் நல்லவரனென என்மனம்
காணுறதே (அ)

3. வனத்திற்குப்போகிய ஐவர்களும் திரும்பிவருவதும் என்ன நிச்சயமா
இனத்துடன் கௌரவர் சேனையை ஜயிப்பது எல்லாம் எனக்கது
சமுசயமே (அ)

4. ஏழைகளாகிய பாண்டவர்களுக்கும் எந்தனுக்கும் ஸம்பந்தமொத்திடுமோ
கோழையபிமனுக்குக் குழந்தை வத்ஸலைதனைக் கொடுத்துமே எந்தன்
கண் பார்த்திடுமோ (அ)

5. அரவக்கொடியோன்மகன் லக்கணனென்பவன் அழகிலுமிகச்சிறந்தவனே
தீரமுடனே இந்த உலக முழுவதையும் ஆண்டிடவே வந்து
பிறந்தவனே (அ)

6. மன்னனிலக்கணனுக்கு என்னுடைய மகளை மணமது செய்குவேன்
மாயவனே
உன்னுடைய மனதை உரைத்திடுவாயெந்தன் உடன் பிறந்து வளர்ந்த
தாயவனே (அ)

## 5-வது கட்டம்

கண்ணன் பலராமன் வார்த்தையை மறுத்துரைத்தல்.

இராகம் 'கோபியர்கள் கோதுலத்தில்' மெட்டு

அண்ணாவே அபிமனையும் அவமதித்தீரே
அசடனான லக்கணனை நீர் துதித்தீரே
கண்மணி வத்ஸலையை காண்டீபன் மைந்தனுக்கே
உண்மையுடன் தருவேனென்றஉறுதிமொழிதான்மறந்து (அ)

1. மோசம் செய்து முன்பரக்கு மாளிகைதனிலே
மூட்டிவைத்தான் ஐவருக்கும் தீயையுமதிலே
ராஜஸூயயாகத்திலென்னை ஏசிமிகப்பேசியதோர்
நீசன்பெற்ற பிள்ளைதன்னை ஆசையுடன் நீர்புகழ்ந்து (அ)

2. அத்தை குந்தி புத்திரரை அன்புடனழைத்தான்
பித்தன் பெரு மோசஞ்செய்து பொருளபகரித்தான்
பத்தினியை உத்தமியைப் பாஞ்சாலன் பெண்மணியை
மெத்த அவமானஞ் செய்த சுத்த நீசனை மதித்து (அ)

3. சிங்கக்குட்டிபோல் அபிமன் சீறியே வருவான்
மங்கை செல்வ வத்ஸலையை மணமது புரிவான்
தங்கை ஸுதன் என்று பெண்ணைத் தந்து விட்டேனென்று
என்னை
சங்கை கொண்டு நாளைவந்து சாட்டிவையாதேயுமண்ணா (அ)

O-8MR0411
N28

4. புண்ணியர்கள் பாண்டவரை இகழலாகுமோ
பொருளிருந்தால் பாவிதனைப் புகழலாகுமோ
அண்ணனே உம் எண்ணம் போலப் பண்ணுமையா
என்றுரைத்த
கண்ணனது வார்த்தையினைக் கண்டுபலராமன்
சொல்வார் (அ)

## 6-வது கட்டம்.

பலராமர் கண்ணனைக் கடிந்துரைத்தல்.

இராகம் 'அள்ளி அள்ளி' மெட்டு

1. காண்டீபன் மைந்தனுக்கோ கண்மணி வத்ஸலையைக்
கல்யாணம் செய்யச்சொன்னாய் கண்ணா நீ
எல்லோருக்கும் முன்பாய் நன்றாய்
காட்டில்அலைந்துவாடிவருந்தி காய்கிழங்குண்டுகாலந்தள்ளும் (கா)

2. கன்றுடன் மாடுகளைக் கட்டிமறித்திட நீ
கற்ற சிறுவனடா கண்ணா நீ
மெற்றத் தெரிந்தோனேடா
கண்மணி எந்தன் பெண்மணி தன்னைக் கண்ணியமில்லாக்
காலந்தள்ளும் (கா)

3. அஸ்தினாபட்டணத்தை ஆண்டிடும் மன்னனடா
அரசன் துரியோதனன் கண்ணா பார்
அரவக்கொடியோன் தீரன்
அருமை மகன் அழகுடையோன் அவனி புகழ் அவனை விட்டு (கா)

4. தம்பி என்றுந்தனிடம் தங்காமல் சொல்ல வந்தேன்
தாயாதியல்லவோடா கண்ணா நீ
மாயாவி சொல்வாயோடா
தட்டி என் சொல்லை அட்டி செய்தாயுன் கெட்ட எண்ணமதை
விட்டுவிடுவாய் (கா)

## 7-வது கட்டம்.

கண்ணன் வார்த்தையை மறுத்து கோபத்துடன் துரியோதனனுக்கு
கல்யாண ஓலை எழுதுதல்.

இராகம் 'தங்கப் பாட்டு' மெட்டு,

அண்ணன் பலராமன் கண்ணன் தன்மீதில் அடங்காத கோபங்கொண்டா
அதட்டி எழுந்தார் அதிவிரைவினிலே
அந்தப்புரம்சென்று ரேவதி தன்னுடன் ஆலோசனை புரிந்தார் (அ)

திருமணவோலை பெருமையாயெழுதி
தேசம்புகழும் துரியோதனர்க்கென்று திருப்பிகன்றாய் மடித்தார் (அ)

ஆள் வசத்தினிலே ஆசையாய்க்கொடுத்தார்
அஸ்தினபுரத்தரசனிடங்கொண்டு அன்பாய்க் கொடென்றுரைத்தார் (அ)

கண்டு துரியோதனன் களித்துமகிழ்ந்தான்
கத்திப்புகழ்ந்து துதித்துச்சகுனிமுன்பு மெத்த நயந்துரைத்தான் (அ)

## 8-வது கட்டம்.

துரியோதனன் சகுனியைப் புகழ்ந்துகொள்ளல்.

இராகம்—'சிங்காரப்பெண்ணே' மெட்டு.

சொந்தச்சகுனிமாமா உந்தனைப்போலாமா
உந்தன் தயவாலே இந்தவுலகாண்டேன் (சொ)

1. பஞ்சவரை வாட்டினீர் பஞ்சையைப்போல் ஓட்டினீர்
சஞ்சலத்தை நீக்கினீர் சந்தோஷங்கேளுமே (சொ)

2. பலராமன் பெண்ணுக்கும் பிள்ளை என் லக்கணனுக்கும்
கல்யாணம் செய்யவேணும் கக்ஷியாக நீருமே (சொ)

3. கண்ணனுக்கறியாமலே அண்ணன் ராமன் பெண்ணையே
பண்ணுவோம் கல்யாணமே பாங்குடன் நாமுமே (சொ)

4. பாக்கு வெற்றிலையுடன் பட்டாடை நகையுடன்
சீக்கிரம் துவாரகைபோய் செய்துவாரும் நிச்சயம்(சொ)

## 9-வது கட்டம்.

சகுனி வரிசைகளுடன் துவாரகை போதல்.

இராகம் 'கண்டாளே ஸீதை' மெட்டு.

வந்தானே சகுனிமாமன் வரிசைகளுடனே
அந்தமாம் துவாரகை அன்புடன் நாடி (வந்)

1. அச்சுதனுங் கண்ணனுக்கு அறிந்திடாமலே
வத்ஸலையை லக்கணனுக்கு நிச்சயம்புரிய (வந்)

2. தட்டுத்தட்டாய் பழவகைகள் தாம்பூலமுடனே
பட்டுபஞரஸ் பாங்குடைய பலபணிகளுடன் (வந்)

3. பாதிவழி வருகையில் கல் பட்டுமே விழுந்து
மோதியதோர் புண் மறைய முகமதை மூடி (வந்)

4. பலராமன் தன்னைக்கண்டு பெண்ணைப்பேசினான்
நலமான முகூர்த்தம் வைத்து நாகரீகமாய் (வந்)

5. அந்தக்ஷணம் அஸ்தினபுரந்தன்னை நாடி
சொந்த மருமகனிடத்தில் சொல்லிக்கொண்டாடி(வந்)

6. மங்களமாம் மாமன்மொழி மன்னனும் கேட்டான்
பொங்கி மகிழ்வாயுகந்து பூரித்தே சொல்வான்.

## 10-வது கட்டம்.

துரியோதனன் சகுனியிடத்தில் தன் பெருமையைப்புகழ்தல்.

இராகம் 'கோடிமனேஜா' மெட்டு

வெகு சந்தோஷமென் சகுனிமாமா இந்த
ஸம்பந்தம்போலாமா வெகு (சந்தோ)

1. ஸுந்தரி வத்ஸலையும் எந்தனுட மகனும்
ஜோடியே இசைந்தவர் தான் வெகு (சந்தோ)

2. அண்ணன் பலராமன் அதிபலபீமன்
அரசன் என் பங்கினிலே வெகு (சந்தோ)

3. கண்ணனந்த மாயன் வெண்ணையுண்டவாயன்
காண்டீபன் கக்ஷியிலே வெகு (சந்தோ)

4. பஞ்சவரை ஜெயிப்போம் பாரதப்போர் முடிப்போம்
பயமில்லை இனிமேலே வெகு (சந்தோ)

## 11-வது கட்டம்.

எல்லாதேச மன்னர்க்ளுக்கும் பலராமர் கல்யாண ஓலை எழுதுதல்

இராகம் 'சொக்காலங்கார'—மெட்டு.

வத்ஸலையை லக்ஷ்ணனுக்கு நிச்சயதாம்பூலஞ்செய்து
அஸ்தினபுரந்தனக்கு அனைவர்களும் போனபின்பு
கல்யாண ஓலைதன்னைக் காக்ஷியுடன் பலராமன்
எல்லாதேசங்களுக்கும் எழுதியே அனுப்பிவைத்தார்

கும்மி மெட்டு.

பர்த்தாவை விட்டுப் பிரிந்ததுயருடன் பத்தினியான ஸுபத்திரையும்
அஸ்தினபுரம் விதுரர் கிரகந்தனில் புத்திரனுடன் வசித்திருந்தாள்.

ராமாவதாரனடி மெட்டு.

கண்டாள் ஸுபத்திரை கல்யாண ஓலைதன்னை
விண்டாள் துயருடனே பெண்மணி விஜயன் ஸுதனுக்குப்போ

சொக்காலங்கார மெட்டு.

காண்டீபன் பெற்றெடுத்த கண்மணியே தேசமெங்கும்
ஆண்டிருக்கும் நாளையிலே அண்ணன் பலராமனுந்தன்
பெண்மணி வத்ஸலையை பிரியமுடனுந்தனுக்கே
உண்மையுடன் தருவதாய் உறுதிமொழி செய்திருந்தார்

கும்மி மெட்டு.

பஞ்சவர் நாடு நகரிழந்தார் நாமும் பஞ்சைகள் போலவே இங்கிருந்தோம்
கொஞ்சமும்நம்மைமதியாமலே அண்ணன் வஞ்சனையாய் வரன்தேடிவிட்டார்

ராமாவதாரனடி மெட்டு.

என்ன செய்குவேனடா என்னுடைய பாலகனே
கன்னிகை உன் வத்ஸலையை லக்கணன் கல்யாணம் செய்திடுவான்

சொக்கர் அலங்காரமெட்டு.

அன்னைமொழி கேட்டுடனே அபிமனப்போ சொல்லுகிறான்
சின்னமாமன் கிருபையினாலே சீக்கிறத்தில் யானுமிப்போ
மாமன்மகள் வத்ஸலையை மணம்புரிந்து வந்திடுவேன்
நீமகிழ்ந்து பாருமம்மா நிமிஷத்தில் என் திறத்தை

கும்மி மெட்டு.

என்று அபிமனுரைத்துவிட்டு வேகம் சென்றுமே பாட்டன் விதுரனிடம்
நின்று வணங்கி ரதங்குதிரைகேட்டு நிமிஷந்தனிலே வாங்கி வந்தான்.

ராமாவதாரனடி மெட்டு.

தாயேநான் துவாரகைக்குத் தங்காமல் போகவேணும்
வாயாரவாழ்த்தியென்னை அன்னை நீ வழியனுப்பவேணுமென்றான்

சொக்கர் அலங்கார மெட்டு.

கேட்டுடனே ஸுபத்திரையும் கிலேசமுடன் சொல்லுகின்றாள்
கூட்டி என்னைப்போகவேணும் குழந்தையுன் பின் நான் வருவேன்
அன்புடனுன் தந்தைக்கும் நான் முன்பு ரதம் ஓட்டிவந்தேன்
இன்பமுடனுந்தனுக்கும் இப்பொழுதும் சாரதியாய்

தும்மி மெட்டு.

ஆசையுடன் ரதம் ஓட்டிவாரேனென்ற அன்னைதனையு மழைத்துக்
[கொண்டான்
தேசம் புகழ்ந்திடும் துவாரகைமாநகர் தேடியே வேகம் கிளம்பி
[விட்டான்

## 12-வது கட்டம்.

அபிமன்னன் தன் தாய் ஸுபத்திரையுடன் துவாரகை போதல்

இராகம் 'அப்பா முருகேசா' மெட்டு.

அபிமன்னன் வழிகாட்ட அன்னை ரதம் ஓட்ட

1. சீக்கிரமாய் துவாரகை போய்ச் சேரவெண்ணி யபிமனப்போ
நோக்கி யந்தக்கானகத்தை நொடியினிலே வில் வளைத்து (அபி

2. பாணமதைத்தான் தொடுத்தான் பாதைதனில் சாய்ந்திருக்கும்
கோணவுள்ள மரஞ்செடிகள் கொடிகளினை வெட்டித்தள்ளி (அபி)

3. முள்ளுடனே கல்லுமலை மூங்கில்களைச் சாய்த்துவிட்டுப்
பள்ளமதில் மேடைத்தூற்றுப் பாரை மயமாக்கி நன்று (அபி)

4. கூசாமல் ஸுபத்திரையும் குறுக்குவழி தேர்நடத்த
ராஜனந்த அபிமன்யுவும் ரஸ்தாவும் சேர்படுத்தி (அபி)

5. காடுமலை மேடு பள்ளம் கரடி புலி வாழும் வனம்
வேடிக்கையாய் இருவருமாய் வேகமுடன் வருகையிலே (அபி)

## 13-வது கட்டம்.

கடோற்கஜன் அபிமன்னன் ரதத்தை மறித்து வாதாடல்.

இராகம் 'உசேனி அரங்கருட கோவிலைப்பார்' மெட்டு.

பல்லவி.

இந்த வனம் வந்தவன் நீ யாரடா சொல் என்றான்
மந்தரம்போல் ஓர் அரக்கன் மறித்து மெதிர் நின்றான்

அநுபல்லவி.

ஸுந்தரியாள் தேர்நடத்த இந்த நிசி ராத்திரியில்
எந்தனுட ஆக்கினையை எண்ணிடாமல் வேகமதாய் (இந்த)

சரணங்கள்.

1. வம்புசெய்து வழிமறுத்து வலுவில் சண்டை செய்தான்
அன்புடனே பாணங்களை அபிமன் மீதில் எய்தான்
கண்டபிமன் ராக்ஷஸன் மேல் கணைமழைகள் தான் பொழிந்தான்
தண்டமதால் அவனடித்தான் றனயன்பிமன் விழுந்தான்
(இந்த)

2. பாரினிலே விழுந்ததொரு பாலகனைக் கண்டான்
வாரியே ஸுபத்திரையும் மடியில் வைத்துக்கொண்டாள்
புத்திரனைப் பார்த்தவளும் மெத்தவும் தவித்தழுதாள்
அத்தருணம் கண்ணன் திருவடிமலரைத்தான் தொழுதாள்
(இந்த)

## 14-வது கட்டம்.

அபிமன்னன் மூர்ச்சையாக ஸுபத்திரை புலம்பல்.

இராகம் 'பெரியாழ்வார் பெற்றெடுத்த' மெட்டு.

1. பலராமன் பெற்றெடுத்த பெண்மணியைக்
கல்யாணம் செய்யவந்தான் காதலுடன் கண்மணியே
கண்ணனே அண்ணனே கானகத்திலுயிர் துறந்தான்
கதறுகின்றேன் காருமையா

2. அன்பாய்க் கோபாலனே நீர் வந்தருள்வீர்
என்பாலனபிமனுயிர் இப்பொழுதே தந்தருள்வீர்
அய்யனே மெய்யனே ஆழியேந்துங் கையனே உன்
அடிமலரை நம்பினேனே

## 15-வது கட்டம்.

காளியை ஸுபத்திரை ஸ்தோத்திரம் செய்தல்.

இராகம் 'காத்தவராயா' மெட்டு.

ஆதி பராசக்தி ஆனந்த ரூபியே அம்பிகையே என்முன் வந்திடுவாய்
ஜோதிஸ்வரூபியே ஸுரவரதாயகி ஸுதனபிமனுயிரைத் தந்திடுவாய்
நீலி நீ காளி நீ நித்யகல்யாணி நீ
சூலி நீ மாயை நீ ஸ்வயம்பிரகாசி நீ
அன்னை நீ யன்புடனே சென்றிடுவாய்
என் அண்ணன் கண்ணனிடம் என் குறையை விண்டிடுவாய்
அந்தரி சுந்தரி அம்பிகை நீ வேகமதாய்
ஆதரிக்கவாருமம்மா.

## 16-வது கட்டம்

காளிகாதேவி சுபத்திரைக்கு வரம் கொடுத்தேகுதல்.

இராகம் 'ஆண்டவன் மித்திரன்' மெட்டு

1. கானகந்தன்னிலே ஸுபத்திரைமாதவள் கதறியே புலம்பையிலே
கண்ணனும் தங்கைமுன் காளியைப்போலவே காக்ஷியுங்கொடுத்து நின்றார்

2. கண்டு ஸுபத்திரை பணிந்து பத்திர காளியைப்பார்த் துரைப்பாள்
காரணி பூரணி கண்மணியபிமனைக் காத்துயிர் தாருமென்றாள்
3. மெத்தப்புகழ்ந்த ஸுபத்திரை முன்வந்த பத்ரகாளி சொல்வாள்
உத்தமி நீயுன் வலக்கரத்தாலுந்தன் புத்திரனைத் தொடுவாய்
4. மைந்தன் பிழைப்பான் மருமகள் தன்னையே மணமது செய்திடுவான்
மங்களமாகவே துவாரகைமாநகர் மகிழ்வுடன் போய் வருவாய்
5. மற்றொரு தருணத்தில் மரித்தவர் பிழைக்கவே உத்தமியுந்தன் இடக்
கைத்தலத்தால் தொடுவாயெனச் சொல்லியே காளியும்போய் மறைந்தாள்

## 17-வது கட்டம்.

காளி வரன்படி ஸுபத்திரை அபிமன்னனை எழுப்புதல்.

இராகம் 'வாரிஜமுகிகள்' மெட்டு.

1. மாயமாய்க் காளியும் போய்மறைந்திடவே
மங்கை ஸுபத்திரை மனமகிழ்ந்திடவே
போயவள் அருமையாய்ப் புதல்வனைத் தொடவே
புத்திரன் உயிர்தன்னைப் பெற்றெழுந்திடவே
கண்டாள் ஸுபத்திரை கண்டாள் ஸுபத்திரை
காதலுடன் தனது கண்மணியைக்கண்டாள் (க)

2. வில்லினை எடுத்தான் வேகமாய்ப் பிடித்தான்
பல்லைக் கடித்தபிமன் பாணத்தைத் தொடுத்தான்
வல்லவன் அரக்கன் தன் மார்பினில் அடித்தான்
வாய்விட் டலறியவன் அவனியில் படுத்தான் (க)

3. அப்பால் அடிபட்டு அரக்கனும் விழுந்தான்
அருகில் இருந்த அவன் அன்னையும அறிந்தாள்
என்பாலகனே என்ன செய்குவேனென்றாள்
எடுத்து மடியில் வைத்து ஏங்கியே அழுதாள் (க)

## 18-வது கட்டம்

இடும்பி கடோற்கஜன் இறந்ததைப் பார்த்து புலம்பல்.

இராகம் 'வாடா கண்மணியே' மெட்டு.

1. மாண்டாயோ மகனே இந்த மானிடனால் புவியில்
காண்டீபன் தமையன் காதல் திருமகனே (மா)

2. பஞ்சவர் நாட்டில் வந்து எந்தன் பாலகன் எங்கே என்றால்
பாவி நான் என்ன சொல்வேன் எனதாவி தவிக்குதடா (மா)

3. எந்தன் தவப்பயனே என் இடும்பன் மருமகனே
கந்தர்ப்பனைப் பழிக்கும் கண்ணே கடோற்கஜனே (மா)

4. பாரினில் பீமருக்கு பட்டத்து ராணியடா
ஆருமில்லாமல் இப்போ அழுதிட நியாய முண்டோ (மா)

## 19-வது கட்டம்.

ஸுபத்திரை இடும்பி முறையால் கடோற்கஜன் பீமன் புதல்வனென்ன அறிந்து கடோற்கஜனை எழுப்பித்தரல்

இராகம் 'ஆதி ஜெகந்நாதர்' மெட்டு.

1. அரக்கி புலம்பல் கேட்டு அன்புடன் ஸுபத்திரை
அருகினில் ஓடி வந்தாள் அதி
இரக்கமுடனே மிக உரக்கவே கூவியந்த
இடும்பியைப் பார்த்துரைத்தாள்

2. ஆரம்மா நீரும் எங்கள் ஐவர் பெயரைச்சொல்லி
அழுதுமே புலம்புகிறீர் அதைக்
கூறம்மா என்னிடம் குழந்தையின் உயிர்தந்துன்
குறையினைத் தீர்ப்பே னென்றாள்

3. கேட்டுடன் இடும்பியும் கிலேசமதனை விட்டு
கிடுகிடென்றே யுரைத்தாள் இந்த
நாட்டினில் புகழுமென் நாயகன் பெருமையை
நவிலுவேன் கேளுமென்றாள்

4. அன்னையுடன் அரக்கு மாளிகை தன்னில் தப்பி
ஐவர் இவ்வனத்தில் வந்தார் அப்போ
தென்னுடைய தமையன் இடும்பனை வதை செய்து
இந்த இடத்தில் இருந்தார்

5. தர்ம புத்திரர் சொல்லால் தம்பி பீமசேனரும்
தானென்னை மணம் புரிந்தார் அங்கு
அம்மா அருமை ஸுதன் அப்பொழுதெந்தனுக்கு
அழகுடனே பிறந்தான்

6. பாரினில் பீமசேனர் பாரியம்மா அவர்
பட்டத்துராணி யம்மா இப்போ
தாரணி தனில் எந்தன் தனயனும் விழுந்தான்
தவித்துமே அழுதே னென்றாள்

7. இடும்பி சொல் கேட்டதும் ஸுபத்திரை மகிழ்வுடன்
இவள் முறை அவளுக்குறைத்தாள் தன
திடது கையால் கடோற்கஜனையே தொட அவன்
எழுந்துமே எதிரில் நின்றான்

8. சிற்றன்னை ஸுபத்திரை என்றறிந்தான் அவள்
சேவடி தனில் பணிந்தான் வெகு
உத்தமனே என்றன் தம்பி அபிமா என்று
உகந்துடன் சொல்லு கின்றான்.

## 20-வது கட்டம்.

கடோற்கஜன் அபிமன்னனைப் புகழ்ந்துரைத்தல்

இராகம் 'கார்க்க நீ வருவாயே' மெட்டு,

கண்மணியே பொறுப்பாய் நீ இங்கு களிப்புடனே இருப்பாய்

1. அண்ணன் தம்பிகள் என்று அறியாமலே இன்று
அதிகமாய்ச் சண்டைசெய்தோம் தம்பி எந்தன் (கண்)
2. மாமன் மகளை மாது வத்ஸலையை
மணமது செய்துவைப்பேன் தம்பி எந்தன் (கண்)
3. கண்ணனை நாடிக் களிப்புடன் கூடி
கல்பாணம் புரிவேன் உனக்கெந்தன் (கண்)
4. மாமனைக்கண்டு மாயைகள் விண்டு
மாதவன் அருளாலே உனக்கெந்தன் (கண்)

## 21-வது கட்டம்.

கடோற்கஜன் தன் மாமன் ஜாங்கலனுக்குச் சொல்லல்.

இராகம் லங்கபங்கா லோட்டா மெட்டு.

1. சங்கைதங்குதடை எங்குமிலாதவென் ஜாங்கலென்னு
மென் மாமா ஓ, ஜாங்கலென்னுமென் மாமா இந்திர ஜாலங்
கற்றதோர் நேமா அதி சமர்த்தனுன்னைப்போலாமா.
2. மாமனுன பலராமன் பெண்ணை இந்த மன்னபிமனுக்கு
யானே இனி மன்னபிமனுக்கு நானே அதி மகிழ்
வுடனே இனித்தானே திருமணமது செய்திடுவேனே (சங்)
3. பாதகனும் துரியோதனன் சேனையைப் பங்கப்படுத்திடுவேன்
யானே மிகப்பங்கப்படுத்திடுவேன் நானே இதைப் பார்த்த
வர் சிரித்திடத்தானே நான் பார்த்து மகிழ்ந்திடுவேனே (சங்)
4. அன்னை இருவரென் தம்பியபிமனுடன் அருகினில் வைரவதஞ்
சேரும் நீர் அருகினில் வைரவதஞ்சேரும் வெகு அன்புட
னவர்களைக்காரும் அரைநொடியில் வருகிறேன்பாரும் (சங்)
5. தக்ஷணம் இன்றுமுன் துவாரகைசென்று என் தாமரைக்
கண்ணனைக்கண்டு நான் தாமரைக் கண்ணனைக்கண்டு என்
தம்பி விவாகத்தை விண்டு அவர் தயவை ஸம்பாதித்துக்
கொண்டு வாரேன். (சங்)

## 22-வது கட்டம்.

கடோற்கஜன் துவாரகைசென்று கண்ணனைப் பிரார்த்தித்தல்

இராகம் பொன்னரங்கநகர் போய்வாவேணுமே மெட்டு.

1. கண்ணனைக் காணவே எண்ணி கடோற்கஜன்
கடுகியே நாடி வந்தான் அதி

காக்ஷியுடைய அவர் திருவரண்மனைக்குள்
காதலுடன் புகுந்தான்

2. சிற்றிடை ருக்மணியுடன் ரத்ன ஊஞ்சலில்
ஸேவித்து மன மகிழ்ந்தான் அருள்
ஸ்ரீ தசனே என்றன் மாதவனே என்று
சேவடி மலர்ப் பணிந்தான்

3. காதலுடனே எந்தன் தம்பியபிமனுக்குக்
கல்யாணம் செய்ய வேணும் நீரும்
காலே ருக்மணியுடன் கருணை செய்தே வந்து
களிப்புடனே நடத்தவேணும்

3. தம்பியபிமனுக்குன் தனயை வத்ஸலை தன்னைத்
தாரை நீர் வார்த்திடுவீர் கொஞ்சம்
தாமஸமில்லாமல் தாஸர் எங்களை வந்து
தயவுடன் கார்த்திடுவீர்

5. மங்கை ஸுபத்திரை மகனுடன் ரைவத
மலையினில் வந்திருக்காள் சாந்தன்
மாமனும் ஜாங்கலன் ராக்ஷஸருடனங்கு
மகிழ்வுடன் கார்த் திருக்காள்

6. தாமரைக் கண்ணனே போய்வருவேனுந்தன்
தயவது வேணும் அய்யா உந்தன்
தாஸர் எங்களை எந்தத் தருணந்தனிலும் வந்து
தட்டாமல் காருமெய்யா.

## 23-வது கட்டம்.

கடோற்கஜன் மாயப்பெண் வேஷங்கொண்டு
ரேவதியிடம் சென்று பேசுதல்.

இராகம் 'ராஜு வேல்ல' மேட்டு.

1. மாயனுக்கீதுரைத்தே மறைந்தேமிக மகிழ்ந்து கடோற்கஜனும்
மாயத்தினலொரு மங்கையைப்போலவே மகிழ்வுடன் வேஷங்
கொண்டான்.

2. பருவமுடையசிறு பெண்மணிபோலவே பாங்குடன் குலுக்கிச்
[சென்றான்
அருமையுடைய பலராமனது பெரிய அந்தப்புரம் போய்நின்றான்

3. கண்டு மகிழ்ந்ததி களிப்புடன் ரேவதி கடுகியே அழைத்துகந்தாள்
அண்டையில் வந்து ஓ அம்மா நீர்யாரென அப்போது சொல்லுகிறான்.

4 புகலுவேன் கேளம்மா துரியோதனன் எங்கள் பூபதி மஹாராஜன்
அகமகிழ்வுடனே தன் தம்பி தனயருடன் அருகினில் வந்திருக்கார்

5. மன்னன் துரியோதனன் மனமகிழ்வுடனே தன் மருமகள்
[வத்ஸலேக்கு
உன்னிதமாகிய உயர்ந்த நகைகளெல்லாம் உவப்புடன் செய்திருக்கார்
6. பார்த்து அளவெடுத்தும் பாலேவத்ஸலேக்கிப்போ பாங்குடன் சில
[நகைகள்
நேர்த்தியாய் செய்ய எண்ணி எந்தனே இங்கு நிமிஷத்தில் அனுப்பி
[வைத்தார்
7. நூற்றுவர் தேவியும் ஆத்திரத்தோடங்குகார்த்திருக்காரம்மணி
ஏற்று என் சொல்லினே எந்தனுடன் மகளே இப்பொழுதனுப்பு
[மென்றுன்
8. உந்தன் பர்த்தாவிடம் இந்த விஷயத்தை நீர் உரைக்கவேண்டாமம்மணி
சிந்தைமகிழ்வுடனே உந்தன் மகளோடிங்கு சீக்கிறம் வந்திடுவேன்
9. மெத்த மகிழ்வுடனே கேட்டந்த ரேவதிமிக்க சந்தோஷங்கொண்டாள்
சிற்றிடை வத்ஸலே தாங்கிடக்கண்டுபோய் சீக்கிறம் எழுப்புகின்றுள்

## 24-வது கட்டம்.

ரேவதி வத்ஸலேயை எழுப்புதல்.

இராகம் 'கமான் கமான்' மெட்டு.

அம்மா அம்மா எந்தன் பெண்மணியே
அழகுள்ள வத்ஸலேயே அன்புடைய கண்மணி (அம்மா)
எத்தனே நேரமடி நீ நித்திரைகள் செய்வது
எழுந்திருப்பாயெந்தன் குழந்தை வத்ஸலேயே (அம்மா)
பத்தினி உன் கணவனேப் பெற்றெடுத்த தாய்களும்
பண்ணின நகைக்களவு பார்த்திட அழைக்கிருர்(அம்மா)
பெற்றதாய் எழுப்பிடவே புத்திரியாம் வத்ஸலே
நித்திரையில் கண்டகனவத்தனேயும சொல்லுவள் (அம்)

## 25-வது கட்டம்.

வத்ஸலே தான் கண்ட சொற்பனத்தைத் தாதியிடம் கூறல்.

இராகம் 'வான மெய்யா நாசா' மெட்டு.

1. அனுகூலன் அத்தைமகன் வந்தாரே இனி
ஆனந்தமானேன் என் தாயே
அடி நானிப்போ கண்டதுங் கனவோடிஸகி
மானே நான் என்ன செய்வேனே (அனு)

1685

2. அடி மட்டிலக்கணன் என்கை தொட்டிடலாமா
மாண்டிடுவேனடி ஸகிமாரே எந்தன்
மாயன் சிற்றய்யா முன்பாலே
அடிவீராதி வீரன் விஜயன் குமாரன்
வில்லாளியபிமனும் வருவாரோ என்னை
கல்யாணம் புரிந்திடுவாரோ ஸகி (அனு)

## 26-வது கட்டம்.

பெண் வேஷங்கொண்ட கடோற்கஜன் ரேவதி சொல்படி வத்ஸலையை தூக்கிச் செல்லல்.

இராகம் 'கோட்டுங்கோடி பெண்கள்' மெட்டு.

1. அண்ணன் பலராமன் மகளே எங்கள்
அரசன் ஸுயோதனன் மருமகளே ஆஹா
அழகியே வாரும் என்னுடன் பழகியே பாரும் அம்மா என்று
முன்பாகவே மெச்சியே வெகு அன்பாகவே வத்ஸலைதனை
வாரி கடோற்கஜன் தூக்கிக்கொண்டான் அந்த
வத்ஸலை தன்னை எடுத்துச் சென்றான்

2. கொஞ்ச தூரமும் நடந்து சென்றானந்த
வஞ்சி வத்ஸலைமுன் சொல்லுகின்றான் நீயும்
அஞ்சாதே பெண்ணே தம்பி எந்தன் அபிமன் தன்
(கண்ணே அம்மா உந்தன்
அத்தையதி உத்தமி ஸுபத்திரையும் புத்திரனும்
அபிமன்னனும் அங்கு காத்திருக்கார் பாரும்
அன்னமே உன்வழி பார்த்திருக்கார்

3. முன்னமே பார் என்று சொல்லி விண்டான் சிறி
யன்னை ஸுபத்திரை தன்னைக்கண்டான் அவள்
அருகினில் விட்டான் கடோற்கஜன் பெருமை
கொண்டிட்டான் மாமன் எனும்
ஜாங்கலனைக்கொண்டு அதி பாங்குடனே மண்டபமும்
பந்தல் படிகள் அலங்கரித்தான் உயர்
கெந்த புஷ்பதாம்பூலம் நிறைத்தான்

4. கண்ணன் வரவினைப் பார்த்திருந்தான் அவன்
காண்டீபன் ஸுதனுடன் காத்திருந்தான் அங்கு
காக்ஷிகள் தரவே தேவிகளுடன் கண்ணனும் வரவே
விண்ணவரோடிந்திரனும் புண்ணியரா முனிவர்களும்
வத்ஸலை கல்யாணஞ் செய்யவந்தார் மிக
மெச்சி எல்லோரும் மனமகிழ்ந்தார்

0-8 MRA 41 V N28

## 27-வது கட்டம்.

ரைவத பர்வதத்தில் வத்ஸலைக்கும் அபிமன்யுவுக்கும் கல்யாணமாதல்.

இராகம் 'இகனேமந்துனே செலியா' மெட்டு.

கல்யாணம் செய்துவைத்தார் கண்ணன் மகிழ்வாகிக்
காண்டீபன் மைந்தனுக்குக் (கல்)

1. நல்லோன் அபிமனுக்கு நங்கை வத்ஸலை தன்னை
உல்லாஸமாயுகந்து ஸல்லாபமாய் மகிழ்ந்து (கல்)

2. துந்துபி வாத்தியங்கள் எந்தத்திக்கு முழங்கி
அந்தமுடன் அதிர அந்தணர்கள் மகிழக் (கல்)

3. கண்ணன் ருக்மணியுடன் பெண்மணி வத்ஸலையை
மன்னனபிமனுக்குக் கன்னிகாதானம் செய்து (கல்)

4. மங்கை வத்ஸலைக்கப்போ பொங்கிமகிழ்ந்தபிமன்
செங்கைத் தவத்தால் திருமங்கல்யம் சாற்றிடக் (கல்)

## 28வது கட்டம்.

கண்ணன் வத்ஸலை கல்யாணத்தை நடத்திவிட்டு துவாரகை செல்லல்,

இராகம் 'ஆரண்யத்தில்' மெட்டு.

1. மங்களமாய்ப் பெண்களெல்லாம் மங்களம் பாட
பொங்கி மகிழ்வாகி விண்ணோர் புகழ்ந்து கொண்டாட

2. அந்தரத்துத் தேவமாதர் அனைவருங்கூட
தும்புருவும் நாரதரும் இன்பமாய்ப்பாட

3. கண்ணனப்போ வத்ஸலைக்குக் கல்யாணம் செய்தார்
அண்ணனுட மருமகனுக் கருள் மழை பெய்தார்

4. மாதவனும் துவாரகைக்கு மகிழ்வுடன் போனார்
ஏதுமறியாதவர் போல் இருந்திடலானார்

## 29-வது கட்டம்.

கடோற்கஜன் ஜாங்கலன் முதலியோர் மாயவேஷம்கொண்டு துவாரகையில் பலவித ரூபமடைந்திருத்தல்.

இராகம் 'குத்தளநீராடி என்னும் தெம்மாங்கு' மெட்டு.

1. பாங்குடனே தம்பிமணம் பண்ணியபின் கடோற்கஜனும்
ஜாங்கலென்னும் மாமனையே சட்டெனவே அழைத்
துரைத்தான்
மாமா நீ மாயையினால் மட்டற்ற சேனையுடன்
ஏமாத்தவேணுமிப்போ எல்லா கௌரவர்களேயும்
பட்டணம் துவாரகையில் பாங்குடன் கடைத்தெருவில்
இஷ்டமுள்ள ஸாமானாய் இருந்திடவேணுமென்றான்
ஆனார் ராக்ஷஸர்கள் அன்புடனே துவாரகையில் ஆனார்

2. எல்லவரும் சேர்ந்து அப்போ ஏகியந்த துவாரகையில்
நல்லதொரு கடைத்தெருவில் நாகரீகமாயமர்ந்தார்
மாடமுடன் மாளிகையும் மண்டபமாஸ்தானங்களும்
கூடமுடன் கோபுரமும் கோட்டையுடன் கொத்தளமும்
பச்சைக்கல் மேடைகளும் பவளக்கால் மண்டபமும்
லஸ்தர் குளோபர்களும் ரஸகுண்டு வரிசைகளும்
ஆனார் ராக்ஷஸர்கள் அன்புடனே துவாரகையில் ஆனார்

3. கோதில்லா மரகதமும் கோமேதகம் கமலங்களும்
ஜாதிஸம்பங்கிமுல்லை சந்தனவில்லைகளும்
பூசும் அத்தர் புனுகும் புஷ்ப தாம்பூலங்களும்
ஆசைகொடுக்கும் நல்ல ஆணிமுத்து ஹாரங்களும்
காக்ஷியுள்ள ஷாப்புகளும் கடையுங்கடைத்தெருவும்
தாக்ஷியில்லாமல் தரும் தயவுள்ள வர்த்தகரும்
ஆனார் ராக்ஷஸர்கள் அன்புடனே துவாரகையில் ஆனார்

4. கண்டான் கடோற்கஜனும் காரியத்தை முடிக்கவெண்ணி
கொண்டான் வத்ஸலையுருவம் கோமளநல் வடிவுடனே
மாமன் தன் இடுப்பினிலே மகிழ்வுடன் ஏறிக்கொண்டான்
தாமஸமில்லாமலவன் துவாரகையில் வந்துவிட்டான்
அன்னைரேவதியுட அந்தப்புறம் தன்னில்போய்
உன்னிதமாய் மகிழ்ந்து உகந்து பெண்போலிருந்தான்
ஆனான் கடோற்கஜன் அழகுள்ள வத்ஸலைபோல் ஆனான்

## 30-வது கட்டம்

துரியோதனன் ஸகல பரிவாரங்களுடன் துவாரகை வருதல்.

இராகம் 'அழகியமா மணவாளநும்' மெட்டு.

1. அரசன் துரியோதனன் யானை சேனைகளுடன்
அஸ்தினபுரம்விட்டு வந்தனன்
வரிசைத்தம்பியுடனே வாத்தியகோஷம் முழங்க
வத்ஸலை தன்னை மணம் செய்யவே (அரசன்)

2. பாவி சகுனி கர்னன் பாட்டன் விதுரர் குரு
பாலர் பலஜனங்கள் கூடவே
பூவையர் நாடவே புகழ்ந்து கொண்டாடவே
பெண்பிள்ளை தாங்கள் கூடியே (அஸ்தி)

3. போத்து செம்பருந்துடன் ஆந்தைகள் கூடவே
பூனைகுறுக்கே விழுந்தோடவே
பார்த்துமே துவாரகை அழகைக்கொண்டாடியே
பாங்காய் சகுனியுடன் கூடியே (அஸ்தி)

## 31-வது கட்டம்.

துரியோதனன் சகுனியிடம் துவாரகையின் அலங்காரத்தைப் பார்த்துப்புகழ்தல்.

இராகம் 'ஆஆவனமீது' மெட்டு.

1. ஆ. ஆ. சகுனியே மாமனே துவாரகை அலங்காரம்பார் அ. அ. ஆ.
ஓஹோ இதைப்போல் எங்கிலுமுண்டோ உறைத்திடுவேன்கேள் அ. அ. ஆ.
2 பெருமையதாகவே ஸம்பந்தி நமக்காய் பலராமனுமே அ. அ ஆ.
அருமையதாகவே அலங்கரித்திருக்கும் ஆச்சர்யம் பார் அ. அ. ஆ.
3. கடைகள் கடைத்தெருக்காக்ஷியை காணவென் கண்களும் கூசுது அ அ ஆ.
வடிவமதாகவே விற்பனை சாமான் விளங்குவதைப்பார் அ. அ. ஆ.
4. பணங்களில்லாமல் ஸம்பந்தி நமக்காய் பட்டாடை நகை அ. அ. ஆ.
குணமுடனுகவே கொடுக்க அழைக்கும் கோலாகலம்பார் அ. அ. ஆ.
5. புருஷர் பெண்டுகள் எல்லவரும் நாம் புதுமையதாகவே அ. அ. ஆ.
அருமையதாகவே ஆடைகள் நகைகள் அணிந்து செல்வோம் அ. அ ஆ.
6. பச்சைப்பனாஸ் ஸால்வைகள் ஸாட்டு பணங்களில்லாமல் அ அ. ஆ.
இச்சைகள் போலவே எல்லவரும் நாம் எடுத்து உடுத்துவோம் அ. அ. ஆ.
7. மல்லிகை முல்லை செண்பகம் ரோஜா மருவுடன் பாதிரி அ அ. ஆ.
எல்லவரும் நாம் வாங்கியே சூட்டி இக்ஷணம் போவோம் அ அ. ஆ.
8. சந்தனம் அத்தர் புனுகு ஜவ்வாது ஸம்பங்கித் தைலம் அ. அ. ஆ.
ஸுந்திரமாகவேஸொகுஸுடன் பூசி ஸுகமாய் செல்வோம் அ. அ. ஆ.
9. கமலவைடூர்ய கெம்பினில் நகைகள் கண்டவர் எங்கிட அ. அ. ஆ.
அமைவுடன் வாங்கி அணிந்துமே போவோம் அழகுடன்நாமும் அ. அ. ஆ.
10. பெண்களுடனே அரண்மனையருகில் பெருமையாய்ப்போவோம் [அ. அ. ஆ.
கண்டுமே ராமன் கௌரவமுடனே களித்தெதிரழைப்பார் அ அ ஆ.
11. மகனிலக்கணனுக்கு மகளையும் கொடுப்பார் மணமதுசெய்வார் அ. அ ஆ
ஸுகமுடன் நாமும் மகிழ்வுடன்கூடி ஸொகுஸுடனிருப்போம் [அ. அ. ஆ.
12. என் மகன் மணத்தைக் சேட்டபிமனும் எங்கியே அழுவான் அ அ.ஆ.
பின்னிட்டுக்கண்ணன் கேட்டு மயங்கி பேந்த விழிப்பான் அ. அ.ஆ

## 32-வது கட்டம்.

துரியோதனன் முதலியோர் ஆடை ஆபரணமணிந்து கல்யாண ஸப்பிரம ஏற்பாடு செய்தல்.

இராகம் 'உசேனி நவாரத்திர்க்தும்மி' மெட்டு.

பல்லவி,

ஆசையுடன் துரியோதனராஜன் அணிந்துகொண்டான் பல ஆபரணம்

அநுபல்லவி.

நேசமுடனே தன் தம்பிகளுடனே
நீசன் சகுனிமாமன் கர்னனுடனே
ஆசையுள்ள பெண்டீர் பிள்ளைகளுடனே
அன்பாகவே இன்பத்துடன் ஆனந்தமாய் ஷாப்புகளில் (ஆ)

சரணங்கள்.

1. அச்சுதன் கண்ணன் அறியாமல் கல்யாணம்
ஆகவே தங்கள் மனம் நினைத்தார் அதி
இச்சையுடன் பல ராமன் எதிர்வந்து
எல்லவரையும் அழைத்துவந்தார்
உச்சிதமாக ஸபை தன்னைக்கூட்டினார் உவந்து கல்யாண வேதிகை
வத்ஸலைக்குச் செய்யும் வரிசைகள் எல்லாம் [நாட்டினார்
வகை ஆயிரம் தொகையாகவே மகிழ் மீறியே செய்தார் அதி (ஆ)

2. நாடியே முகூர்த்தம் வெள்ளிக்கிழமையில்
நல்ல லக்னம் காலை வேளையிலே வெகு
வேடிக்கையாகவே மகன் லக்கணனுக்கு
விரதச்சடங்குகள் செய்து வைத்தார்
கூடிஸபைதன்னில் லக்கணனுடனே கும்பல்களாகவே வந்து
வாடியம்மா என்று வத்ஸலை முன் சென்று [நிறைந்தார்
வாராய் ஸபை நேராகவே பாராய் மகிழ்மீறாய் என் (ஆசை)

## 33-வது கட்டம்.

மாயப்பெண் வத்ஸலை வேஷங்கொண்ட கடோற்கஜன்
எல்லாவித பாக பக்ஷயாதிகளை மிச்சமில்லாமல் புஸித்து விடுதல்.

நொண்டிச்சிந்து.

1. மாயப்பெண் வத்ஸலையை ரேவதி மகிழ்வுடனே வாரி எடுத்
துக்கொண்டாள்-பேயோ பெரும் பூதமோ இது என்ன
பெருத்த மலை போல கனக்குதென்றாள்
2. அம்மாவென்றழைத்தான் கடோற்கஜன் அதிகமாக எனக்கு
வயிறு மிகவும் சும்மா பசிக்குதென்றான் ரேவதி சுருக்காய்
மடப்பள்ளியில் கொணர்ந்து விட்டாள்
3. கண்டான் கடோற்கஜனும் அங்குள்ள காக்ஷியையும் தளிகை
நேர்த்தியையும்-அண்டா சருவமுடன் பாயஸத்தை அப்
படியே வாய் தனில் கொட்டிக் கொண்டான்
4. கொல்லிமலை போலிருந்த கரியமுது கூட்டுப்பச்சடிகளைப்
[போட்டுக்கொண்டான்
எல்லா பக்ஷணங்களையும் மிச்சமின்றி எடுத்துமே வாய்க்
[குள்ளே தட்டிக்கொண்டான்
5. மந்தர பர்வதம் போல குவித்திருந்த மாளாத அன்னத்தை
[மாய்த்து விட்டான்
சிந்தாமல் சிதறாமல் வயிற்றுக்குள் சிறிதும் மிச்சமில்லாமல்
[நிறைத்து விட்டான்
6. உக்கராண அறையைக்கண்டான் அங்கிருந்த உப்புப் புளி
[பருப்பு அதையுமுண்டான்

நிற்காமல் அங்கிருந்த வெற்றிலே பாக்கை நிமிஷத்தில்
[வாய்க்குள்ளே போட்டு மென்ருன்

7. ஸகலமும் முடிந்ததென்ருன் இனி எனக்குச் சந்தோஷ மாச்சு
[தம்மாடி என்ருன்
அகமகிழ்வுடனே நின்ருன் அப்பொழுது அன்னே ரேவதி
[பெண்ணே அழைத்துச்சென்ருள்.

8. அம்மா ரேவதியு மப்போ வத்ஸலே என்று அழைத்துப்
[பெண்ணே மணேயில் இருக்கச்செய்தாள்
சும்மா வீற்றிருந்த கன்னிகையை சுருக்கினில் மாப்
[பிள்ளே கண்டுரைப்பான்

தந்தீலத்தனதனஅ.

## 34-வது கட்டம்.

லக்கணகுமாரன் மாய வத்ஸலேப் பெண்ணேப் பார்த்து
பயந்து கதறுதல்.

இராகம் 'பெண்ணே ரயிலோடி' மேட்டு.

வேண்டாம் கல்யாணம் அண்ணு மிக
வேதனேயாகிறதே இனி (வேண்டாம்)

1. காண்டா மிருகம் இதனேக் கண்டால் பயமாகுதே
மாண்டுவிடுவேனய்யா இது மாயப் பெரும் பூதந்தான் (இ)
2. கையைப் பிடிக்கையிலே கருந்தேளாய்க்கடிக்கிறதே
மெய் பதைக்கிறதே எந்தன் மென்னே அடைக்கிறதே (இ)
3. பன்றி குரங்கினேப்போல் இது பல்லே இளிக்கிறதே
என்னேக்கடிக்கிறதே அய்யோ யானேபோல் தோணுறதே (இ)
4. கழுதை ஒட்டகத்தைப் போல் இப்போ காட்டுதே முகந்தனே
அழுகைவருகிறதே அய்யோ அப்பா எனக்கிந்த பெண் (இ)
5. மங்கல்யங் கட்டையிலே மலேப்பாம்பைப்போல் சீறுதே
சிங்கம் புலி கரடி பெரும் செந்நாய்போல் காணுறதே (இ)

## 35வ-து கட்டம்

துரியோதனன் முதலிய கௌரவர்களே மாயராக்ஷதர்கள்
துன்புறுத்தல்.

இராகம் 'அம்பவே காரவே' மேட்டு

1, அருமை லக்கணன் பயந்து அழுது மெத்த ஓடினுன்
பெருமையுடைய துரியோதனனும் பேந்தவிழித்து வாடினுன்
2. கண்டுமே கடோற்கஜன் தன் கையைத் தட்டிக் கொட்டினுன்
துண்டரீக மாக அவனே துரியோதனனும் திட்டினுன்

3. கொண்டானடித்தனன் குதித்தனர் பலராக்ஷஸர்
அண்டாமல் துரியோதனனை அடித்துவிட்டு ஓடினர்
4. கடுக்கனுன ராக்ஷஸன் அவன் காதுடன நின்று தொங்கினன்
வெடுக்கென்று கிள்ளி கௌரவர்களை வேகமாக ஓடினன்
5. சிகையினில் பூவானவன் அவன் சிண்டு தன்னைப்பற்றியே
அகமுடையதோர் துரியோதனனை அடித்துத்தள்ளி ஓடினன்
6. கெந்தமான ராக்ஷஸர் மிகக் கேலிசெய்து கௌரவர்
அந்தமான மார்பில் குத்தி அதட்டிவிட்டு ஓடினர்
7 பட்டு ஆடையானவன் அந்த பாவி கௌரவர்களை
விட்டு அம்மணங்களாக்கி விழுந்து சிறித்து ஓடினர்
8. புடவையான ராக்ஷஸர் அவர் பெண்டுகள் எல்லோரையும்
அடங்கலும் நிர்வாணமாக்கி அவமானஞ் செய்தோடினர்

## 36-வது கட்டம்.

துரியோதனன் முதலியோர் அவமானமடைந்து
அஸ்தினபுரம் செல்லல்.

இராகம் மோஹனம் 'துட்டிக்குரங்கே' மெட்டு

எல்லோரும் பங்கமானுர் அஸ்தினபுரம்
சொல்லாமல் ஓடிப்போனுர்

சரணங்கள்

1. பொல்லாத துரியோதனன் பெண்டாட்டி பிள்ளையுடன்
அல்லோகலமாய் நின்று அம்மணத்துடன் அன்று (எல்)
2. தம்பி தம்பிகள் ஸம்ஸாரம் தமர்களுடன்
வெம்பி மனம் தளர்ந்து வெட்கமடைந்து அன்று (எல்)
3. கெட்ட கர்னன் சகுனி முட்டாள் துச்சாஸனனும்
பட்ட அடியைக்கையால் தொட்டுத் தடவிக்கொண்டு
4. பாட்டன் விதுரர் குரு பாலர் கிருபர் தவிற
கூட்டங்கூட்டமாய் வந்த கும்பல்களுடன் கூடி (எல்)
5. அந்தத்துரௌபதைதன்னை அவமானஞ்செய்த பலன்
இந்த ஜென்மத்தினிலே எனக்குக்கிடைத்ததென்று (எல்)

## 37-வது கட்டம்.

கடோற்கஜன் சந்தோஷமடைதலும் பலராமர்
கண்ணனிடம் முறையிடுதலும்

இராகம் ஆதி சிதம்பரத்தே மெட்டு.

1. ஆடையெலாமிழந்து கௌரவர்கள் அத்தனைபேரும் நொந்து
வாடிப்பரிதவித்து நில்லாமலே ஓடி ஒளிந்துவிட்டார்

2. பார்த்துமகிழ்ந்து மப்போ கடோற்கஜன் பத்தினியைப்பழித்த
ஆத்திரத்தை முழுவதும் இன்றுடனே தீர்த்துமகிழ்ந்தே
னென்றான்

3. கூடியே வந்த பல அரக்கரைக் கூட்டிப்புகழ்ந்துகொண்டான்
வேடிக்கையாக அப்போ தம்பியிடம்வந்து மகிழ்ந்திருந்தான்

4. அண்ணன் பலராமன் நடந்ததோர் அற்புதங் கண்டு நொந்தார்
பெண்மணிவத்ஸலையைத்தேடி தம்பி கண்ணனிடத்தில்வந்தார்

5. பாலகோபாலனப்போமஞ்சந்தனில்பள்ளிகொண்டேயிருந்தார்
கோலமுடனெழுந்து தமயனைக்கொண்டாடிப் புகழ்ந்தார்

6. அண்ணா நல்வரவேர் இங்குவந்த அற்புதமென்னவென்றார்
கண்ணாவென்றழுது பலராமர் கதறிக்கொண்டு விண்டார்

## 38-வது கட்டம்.

பலராமர் கண்ணனிடம் தன் குறையைச் சொல்லல்

இராகம் 'ஹாரதுத்வஹா' மெட்டு

1. ஹே முகந்தகா சியாமள ஸவுந்திரா ஹே
எந்தனுடைய சொந்தமகளை எங்கும் காணேனே
ஏதுசெய்குவேன் ஏதுகுல வரதா (ஹே முகுந்)

2. என்ன காலமே இந்திரஜாலமோ
இடும்பிமைந்தன் செய்த சூதோ ஏதுமாயமோ
எங்கும் தேடினேன் ஏங்கி வாடினேன்
வீரா தீரா விஜய கோபாலா (ஹே முகுந்த ஹா)

## 39-வது கட்டம்

பலராமர் கிருஷ்ணர்கள் பல இடங்களிலும்
வத்ஸலையைத் தேடுதல்.

இராகம் 'ஆதிமூலமான' மெட்டு

1. அண்ணனை ராமனுடனே தம்பி கூடினார்
அறிகிலேனே என்று அந்தப்புரத்தில் ஓடினார்
கண்மணி தன்னைக்காணேன் என்று கலங்கி வாடினார்
கண்ணன் மாயம்செய்து தேடினார்

2. அந்த ஸமயம் நாரதமுனி வந்து கூடினார்
அண்ணன் தம்பி இருவர் தங்கள் அருகில் நாடினார்
விந்தையுடனே துடையில் தாளம் தட்டி யாடினார்
வீணாகானம் செய்து பாடினார்

## 40-வது கட்டம்.

நாரதர் பலராமர் கிருஷ்ணனிடம் வருதலும்
வத்ஸலே கல்யாணத்தை மகிழ்வுடன் கூறுதலும்.

இராகம் 'காழனிவினவே' மெட்டு.

வைபோகமென்ன சொல்வேன் கல்யாண வைபோகமென்ன சொல்வேன்.

1. ரைவத பர்வதத்தில் லக்ஷணமாக வந்த
பையன் அபிமனுக்குப் பாங்காய் நடந்துகந்த (வை)

2. நேற்று புதன்கிழமை ராத்திரி வேளையிலே
ஸாஸ்திர முறைப்படி சம்பிரமமாய் நடந்த (வை(

3. கண்ணன் ருக்மணியுடன் மன்னன் அபிமனுக்கு
பெண்மணி வத்ஸலையைப் பிரியமாய்த் தாரைவார்த்த (வை)

4. இந்திரன் தேவியுடன் வந்தார் மணமுகந்து
சந்தோஷமாக மணம் செய்தார் மணமகிழ்ந்து (வை;

## 41-வது கட்டம்.

நாரதர் வத்ஸலே கல்யாண சிறப்பை விபரமாய்ப்
புகழ்ந்துரைத்தல்.

இராகம் 'காலேகன்று' மெட்டு.

ஆ அற்புதம் ஆ ஆனந்தம் ஆச்சரியம்.

1. காணவேணும் கண்பலகோடி
கண்ணன் மருமகன் கல்யாணம் (ஆ)

2. அண்டமளாவிய மண்டபத்தழகும்
ஆணிப்பொன் மரகதத் தோரணமும் (ஆ)

3. நவரத்தனத்தால் பந்தலினழகும்
நானுதேசத்து வாத்தியமும் (ஆ)

4. பக்ஷமதாகவே லக்ஷம் லக்ஷம் பவுன்
தக்ஷிணையாகவே கொடுத்ததுவும் (ஆ)

5. பீமசேனன் பிள்ளை கடோற்கஜன்
பண்ணின விமரிசை என்ன சொல்வேன் (ஆ)

6. பதினாயிரம் தேவிகளுடனே
பாங்குடனே கண்ணன் நடத்திவைத்தார் (ஆ)

7. அண்ணுவான பல ராமர் உம்மை
அங்கினில் ஏனோ காணவில்லை (ஆ)

## 42-வது கட்டம்.

நாரதர் சொல்லால் பலராமர் கண்ணன்பேரில் கோபித்தலும் கண்ணன் ஸமாதானம்செய்து தம்பதிகளை அழைத்துவந்து உபசரித்தலும்.

இராகம் 'பெத்தெடுத்த தந்தை' மெட்டு

1. விண்ணுலக நாரதரின் வார்த்தையினைக் கேட்டு
பலராமன்
கண்ணன் மீதில் கோபங் கொண்டு
கலப்பையினை ஓங்கி எதிர் நின்றார்
2. பார்த்து மப்போ கோவிந்தனும்
பலராமன் தன்னைமிகப் போற்றி
ஆத்திரமேன் அண்ணனே நான்
அப்பொழுதே சொல்லி விட்டேனென்றார்
3. நம்முடைய மருமகனும் நாட்டிலதி
சூரனன்றோ அண்ணா
பிரமனுடைய கையெழுத்தை
போக்க நம்மா லாய்விடுமோ என்றார்
4. மகளான வத்ஸலையும்
மருமகன் நம் அபிமனையும் அண்ணா
அக மகிழ்வாய் துவாரகை நாம்
அழைத்துவர வேணுமிப்போ என்றார்
5. கிருஷ்ணனுடைய வார்த்தையினைக்
கேட்டு மகிழ்வாகிப் பலராமன்
பக்ஷமுடன் வேகமதாய்ப் பலவித
மாய் வாத்ய கீதமுழங்க
6. அக்ஷணமே ரைவதம் போய்
அபிமனையும் பெண்தனையும் அழைத்தார்
இஷ்டமுடன் கொண்டாட இடும்பிஸுதன்
தன்னை மிகப் புகழ்ந்தார்
7. உல்லாஸமாக ராமன் ஊர்வலம்
செய்து மிக மகிழ்ந்தார்
நல்ல வேளை தன்னில் மாலைமாற்றி எதிர்
ஏற்றி ஊஞ்சல் வைத்தார்

## 43-வது கட்டம்.

வத்ஸலை அபிமன்யுவை ஊஞ்சல் வைத்து மகிழ்தல்.

ஊஞ்சல் ராகம் பைரவி.

1. விந்தை நிறை செம்பவளக்கால்கள் நாட்டி
விளங்குமுயர் மாகதத்தால் கொடுங்கை பூட்டி

அந்தமுள்ள நவரத்தின ஊஞ்சல் மீதே
அபிமனுடன் வத்ஸலேயும் ஆடி ஊஞ்சல்

2. இச்சையுடன் மாதர் பலர் கீதம் பாட
இருமருங்கும் தாஸர் வெண்சாமரைகள் போட
வஜ்ஜிர வைடூர்ய நல் ஊஞ்சல்மீதே
வத்ஸலேயும் அபிமனுடன் ஆடி ஊஞ்சல்

## 44-வது கட்டம்.

இராகம் 'பாதிமதிநதி' யென்னும் திருப்புகழ் மெட்டு.

லாலி.

ஆதியயன் துதியோதி மகிழ்பதுநாதன் மருகனே லாலி லாலி
ஆரகிரிட கேயூரமணியலங்கார அபிமனே லாலி லாலி
சோதி நிறைமலர் மீதிலுறை திருநாதன் மருகனே லாலி லாலி
சோதை ஸுதன் மதுஸூதனருமை ஸோதரிஸுதனேலாலிலாலி

1. அன்னையெனும் சோதைமுன்பு வெண்ணெ தயிர்க்காடி
ஆநிரைகள் மேய்த்துகந்து அண்ணனுடன்கூடி
குன்றெடுத்து மழைதடுத்துக் கோவலர் குறைதீர்த்த
கோபாலன் மருகனபிமன்னனுக்கும் லாலி.
வஞ்சியர்கள் சேலேயெல்லாம் வாறிமரமேறி
வாதுசெய்து அஞ்சலிகள் வாங்கி மகிழ்மீறி
அஞ்சாமல் காளியன்மேல் ஆடிநின்றமாயன்
அச்சுதனர் அண்ணன்மகள் வத்ஸலேக்கும் லாலி.

## 45-வது கட்டம்.

இராகம் தோடி 'நினுவினுகதிலேதுரா' மெட்டு.

நலங்கு.

மன்னு நலங்கிடவா அபி
மன்னு நலங்கிடவா

1. மன்னு ஸம்பன்னு விர்ப்பன்னு என் மனமகிழ்
மாரா நலங்கிடவா அபிமனே கெம்பீரா நலங்கிடவா
ஸுந்திர ஸுகந்த அரவிந்த முகச்சந்திரனென்
நந்த நந்தனின் கோவிந்தன்மகிழும் குணசீலா நலங்கிடவா
அத்தைபதி உத்தமி ஸுபத்திரையின் புத்திரனே
வீராகுந்தி மகிழும்பேரா விஜயன்பெற்ற சூரா நலங்கிடவா

இராகம் 'நலங்கிடதா' மெட்டு

நலங்கிடுவேன் நானுமன்பாய் நாதனே கெம்பீரா
கலங்கிடாமல் போர்புறிந்திடும் காண்டீபன் குமாரா   நல
1. பதமலர் தன்னில் பாரும் மஞ்சள் பாங்குடனே பூசி
அகமகிழ்வுடன் கண்ணன் புகழை அன்புடனே பேசி   நல
2. மருமலர்ப்பூச் சூட்டியேஉயர் மணங்கமழ் கெந்தம்பூசி
அருமையுடனே விசிரிஎடுத்து ஆதரவுடன் வீசி   நல

## 46-வது கட்டம்.

இராகம் 'அம்பாள் மதுரை மீனாக்ஷி' மெட்டு.

என் அன்பா அத்தை குமாரா   வடி
வழகு நிறைந்தவொரு கெம்பீரா
அவனி புகழும் தீரா நீர்
ஆசையுடன் கண்ணாடியைப் பாராய்   என்

அபிமன்னு மருமலர் சூட்டி உன்
மதிமுக வடிவைக் கண்ணாடியில் காட்டி
நன்னுயுமக்கொரு போட்டி இதில்
நாதனே காணுவீர் உம்முடபேட்டி   என்

இராகம் 'ஆனந்தபைரவி' ஸீஸபத்தியம்.

குருகுலதிலகனேகுந்தி மகிழ் பேரனே
கோமள சரீரனே குணவிலாஸா
பெருமைசேர் சிலைவிஜயன் பிள்ளையே என்னுடைய
பிரியமணவாளனே   பிராணநேசா
அருமையுடனே எனது அத்தைமகிழ் புத்திரா
அபிமனே கண்ணனுக்கும் அதிவிஸ்வாசா
கருணை செய்வரோ மாலெனக் கார்த்திருந்தேன்
வருகுவாயென்று யானுன் வழி பார்த்திருந்தேன்
தருணமதில் வந்து கார்த்த என் தரும துரையே
தாம்பூலம் வாங்குமே தெண்டனிடுரேன்

## 47-வது கட்டம்

இராகம் 'ஜோர் ஜோர்' மெட்டு.

பார் பார் நலங்கிடுகிறேன்   ப்ராணஸகியே பார்

சரணங்கள்.

1. பாரினில் பலராமன் மகிழும் பாலையேயுன் காலிணைகளில் பார் பார்
ஆசையுடன் ஜவ்வாது புனுகு வாஸனை கெந்தசம் பூசி மகிழ்ந்து பார்
பாதிரி இருவாக்ஷி முல்லை காதலுடனே சூட்டி உனக்கு பார் பார்
அச்சுதன் மகன் வத்ஸலையுனக் கிச்சையுடனே மெச்சி அன்பாய் பார் பார்

## 48-வது கட்டம்.

இராகம் யதுகுலகாம்போதி.

பத்யம்.

அண்ணன் பலராமனது பெண்மணியே வத்ஸலையே
அன்புடனே யுன்னையே யெண்ணியானும்
பச்சைநிற மேனியனென் அச்சுதனை வேண்டியே
பக்ஷமாய்த் துவாரகையை நாடிவந்தேன்
சிற்றிடையே உத்தமியே இத்தருணமுன்னை நான்
சீக்கிரம் கல்யாணம் செய்துகந்தேன்
அஞ்சுகம்போலே கொஞ்சுமொழி அன்னமே கேள்
மிஞ்சமகிழ்வாகி என்னுடன் கூடி நாளும்
கொஞ்சி விளையாடி வாழலாம் கோமளாங்கி
அஞ்சாமல் தாம்பூலம் வாங்குவாய் அமிர்தவசனி

## 49-வது கட்டம்

இராகம் மோஹனம் 'என்னடுதயவல்ஸலனே' மெட்டு

பந்து.

பாலெடுத்தடிப்போம் பார்த்தன் குமாரா நாம்குட்

அநுபல்லவி.

கோலால்நிறை மேய்த்துகந்த
கோபாலனைக் கோறிநாம் குட் பாலெ

சரணங்கள்.

டென்னிஸ் என்னு மிப்பந்தை யெடுப்பேன்
திறமுடனெந்தன் கையில் பிடிப்பேன்
பின்னுமுமக்கு முன்னமடிப்பேன்
பிரியமுடனே நானே பிடிப்பேன்

குன்றெடுத்து மாரிகார்த்து
அன்றுகோப கன்னிமார்கள்
கூறைவாரியே ஒளித்த வாரிஜாக்ஷனை
நினைந்து (பாலெடுத்தடி)

## 50-வது கட்டம்.

மங்களம்.

இராகம் 'எந்தஜாலமு' மெட்டு.

மங்களம் ஜயமங்களம் சுபமங்களம் புகழ்வோம்
மங்கை ருக்மணிமனோஹரர்க்கு மந்தஹாஸவதனருக்கு மங்.

சரணங்கள்.

1. பாண்டவர் ஸகாயனுக்குயர் பச்சைவண்ணர்க்கு
காண்டீபன் தனயனுக்கருள் கமலக்கண்ணர்க்கு
பாஞ்சாலி மானங்காத்த பரமதயாபரர்க்கு மங்.
2. நந்தகோபர் சோதைமகிழும் சொந்த பாலர்க்கு
சுந்தராங்கி கோபியர்புகழ் சுகுணசீலர்க்கு
நாரதாதி முனிவர் கோரிப்பணிபு தாரருக்கு மங்.
3. திருவரங்க ராஜருக்குயர் திருவிலாஸர்க்கு
கருணைநிறை ஸர்வேசருக்கருள் கமலை நேசர்க்கு
தீனையானபேர்க்கும் ஞானமருள் உல்லாசருக்கு மங்.
4. பாடிப்பதின்மர் கூடிப்புகழும் பணியரங்கர்க்கு
சூடிக்கொடுத்த கோதைமகிழும் சுந்தராங்கர்க்கு
பாங்காய் ரங்கநாயகிக் கருள் சுபாங்கருக்கு மங்.

வத்ஸலா கலியாணக் கும்மி
முற்றிற்று.

14850

# விளம்பரம்.

---

## ஸ்ரீரங்கம் ரங்கநாயகி அம்மாள் இயற்றிய புஸ்தகங்கள்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| துளசி மஹாத்மியக் கீர்த்தனை | 0—6—0 |
| தொண்டரடிப்பொடியாழ்வார் சரித்திரக் கீர்த்தனை | 0—6—0 |
| வத்ஸலை கல்யாணக் கும்மி | 0—5—0 |
| ருக்மணி கல்யாணக் கும்மி | 0—5—0 |
| நௌகா சரித்திரக் கும்மி என்னும் காக்ஷி ஓடக்கும்மி | 0—3—6 |
| கோதை பரிணயக் கும்மி | 0—3—0 |
| கோபிகா வஸ்திராபஹரணக் கும்மி | 0—3—0 |
| எக்ஞய பத்தினிகள் சரித்திரக் கும்மி | 0—3—0 |
| அநுசூயா சரித்திரக் கும்மி | 0—3—0 |
| நம்மாழ்வார் சரித்திரக் கும்மி | 0—3—0 |
| ஸ்ரீரங்கநாதன் பள்ளியறைக் கீர்த்தனை | 0—2—0 |
| தேரழுந்தூர் சுவாமி கும்மி | 0—2—0 |
| ஸ்ரீரங்கம் வழிநடைக் கும்மி | 0—1—6 |
| சம்மந்தியேசல் | 0—1—0 |

இவைகள் வேண்டியவர்கள் ஸ்ரீரங்கம் வடக்குச் சித்திரவீதி 341 நெ. வீட்டில் பெற்றுக்கொள்ளலாம். வி. பி. மூலமாகவும் அனுப்பப்படும்.

---

## அறிவிப்பு.

இதனால் சகலமான ஜனங்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்: மேற்கண்ட புஸ்தகங்கள் யாவும் ஷை ஸ்ரீரங்கம் ரங்கநாயகி அம்மாளால் இயற்றப்பட்டு காபி ரைட் செய்யப்பட்டிருக்கிறபடியால் யாரேனும் ஷையாருடைய உத்திரவின்றி அச்சிட்டால் 1867-வருஷ 25-வது ஆக்டின் 20-வது பிரிவு 6-வது விதிப்படி தண்டனைக்குள்ளாவார்கள் என்பதை அறியவும்.